1987 நவம்பர் 16]

குடவாசலில் நகரப் பேருந்துகள் விடுதல்.

126— (*வினா எண். 7556) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் குடவாசலை நகரப் பேருந்து விடப்படும் இடமாக அறிவித்து அங்கிருந்து பல கிராமங்களுக்கு நகரப் பேருந்துகள் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, குடவாசல் நகரப் பேருந்துகள் விடும் இடமாக அறிவிக்கப்பட்டுள்ளது. குடவாசலிலிருந்து பல்திசை வழித்தட உரிமத்தின் கீழ் சில வழித்தடங்களில் பேருந்துகள் விட தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : தலைவரவர்களே, குத்தாலம் தொகுதி குடவாசல் பேரூராட்சியை 'டவுன்' ஆக அறிவித்து போக்குவரத்துத் துறை மூலமாக டவுன் பஸ் விட ஏற்பாடு செய்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குடவாசலிலிருந்து இறவாஞ்சேரி வழியாக வடமட்டத்திற்கும்; அதைப்போன்று குடவாசலிலிருந்து இறவாஞ்சேரி வழியாக பேரளம், ஆலத்தூர் பகுதிகளுக்கும் டவுன் பஸ் விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று வழித்தடங்களில் பேருந்து விடப்பட்டிருக்கிறது. மீண்டும் 4 வழித்தடங்களில் பேருந்து விட கருத்துரு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற வழித்தடத்தில் பேருந்துகள் விடுவதற்கான கருத்துரு இருக்கிறதா என்ற குறிப்பு இல்லை. அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் பேரூராட்சியைப் போக்குவரத்துத் துறையின் டவுன் சென்டராக மாற்றியிருக்கிறார்கள். எனவே அந்தக் குடவாசலில் சி. ஆர். சி. யின் மூலமாக ஒரு டெப்போ கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பக்கத்திலே இருக்கிற டெப்போக்கள் எப்படி இருக்கின்றன,, எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்பதைப் பொறுத்துத்தான் அங்கே தனியாக ஒரு பணிமனை அமைக்க முடியுமா என்பதை ஆய்வு செய்யவேண்டும். இப்போதுதான் அது டவுன் சென்டராக மாற்றப்பட்டிருக்கிறது; எனவே அதற்குள்ளாக அனேகமாக அங்கே பணிமனை அமைக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் கருதுகிறேன்.